# 7

# இயேசுவின் விசாரணைகள்

## மத்தேயு 26:57–27:31; மாற்கு 14:53–15:20; லூக்கா 22:54–23:25; யோவான் 18:12–19:16

*"அநேகர் அவருக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லியும், அந்தச்சாட்சிகள் ஒவ்வவில்லை" (மாற்கு 14:56).*

கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்த நிகழ்ச்சியானது அதற்கு வழி நடத்திச்சென்ற வெட்கமற்ற பிற நிகழ்ச்சிகளை நாம் காணாது விடுமளவுக்கு அல்லது மறந்து போகுமளவுக்கு மிகவும் பயங்கரமானதாக இருக்கிறது. இயேசுவை விசாரணை செய்த நிகழ்ச்சிகள் யாவையும் தொடக்கம் முதல் முடிவு வரையிலும் நியாயமற்றவைகளாகவே இருந்தன! சாத்தான்கூட நாணம் அடையும் அளவுக்கு இயேசு முரட்டுத்தனமாகவும் கொடுமை யாகவும் நடத்தப்பட்டார்! சாத்தானால்கூடப் பாவத்தைக் கட்டுப்படுத்த முடியாது!

அவரை விசாரித்த நிகழ்ச்சிகளின் இந்த வேளையானது வரலாறு முழுவதிலும் மிகவும் சிறுமைக்குரிய வேளையாக இருந்துள்ளது. யூதாஸ் காட்டிக்கொடுத்தான், பேதுரு மறுதலித்தார், பத்து அப்போஸ்தலர்கள் பாதுகாப்புத் தேடி ஓடினர் - அன்னா, காய்பா, பிலாத்து, மற்றும் ஏரோது என்ற - நான்கு கைப்பாவை ஆளுநர்கள் - "நியாயாதிபதியை" நியாயந் தீர்த்தனர், மற்றும் மிகவும் மதிப்புக்குரிய சனதெரீன் ஆலோசனை சங்கம் சட்டமுறையற்ற கும்பலாயிற்று. வரலாற்றிலேயே மாபெரும் அளவில் சட்டரீதியான ஏளனக்காட்சியொன்றை உண்டாக்க, பரிசுத்த நகரமும் (எருசலேமும்) சட்டத்தின் நகரமும் (ரோமாபுரி) ஒன்றிணைந்தன.

இயேசு மாத்திரமே கட்டுப்பாட்டில் இருந்தார் (யோவான் 10:17, 18; 19:10, 11). அவர் தெரிந்தே எருசலேமுக்குப் போவதைத் தேர்ந்துகொண் டிருந்தார் (லூக்கா 9:51). அவரது "வேளை" வந்திருந்தது (யோவான் 17). அவர் தம்மைக் கைதுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளும்படித் தமது எதிரிகளைக் கோபப்படுத்தினார் மற்றும் வசதி ஏற்படுத்திக் கொடுத்தார். இதை நாம் காண முடிகிறதா?

இன்றைய நாட்களில் கிறிஸ்து ஒரு அன்பான, மென்மையான, மற்றும் நேர்த்தியான இயேசுவாகக் குறைக்கப்பட்டுள்ளார். இல்லை! அவர் "புருஷர்களில் புருஷராக" இருந்தார், மகிமைப்படும் பெலவீனராக அவர் இருக்கவில்லை. அவர் சாத்தானையும், யூதத்துவத்தையும், மற்றும் முழு உலகத்தையும் மேற் கொண்டு - வெற்றி பெற்றார். ஒருக்காலும் அவர் எவரொருவரிடத்தி

*னின்றும் பின்வாங்கியதில்லை!*

*யூதத்துவமானது (எருசலேம்) ஒழுக்கரீதியாகவும் ஆவிக்குரிய வகையிலும் திவாலான நிலையில் இருந்தது. மனிதனை அவனது மோசமான நிலையில் நாம் காணுகையில், தேவனை அவரது பரிபூரணத் தன்மையிலும் காணுகிறோம். இது கிருபையின் மகிமையாக உள்ளது. இயேசு ஒரு நகரினுள் பதுங்கி நுழையவோ அல்லது மூடிய அறையினுள் ஒளிந்து கொள்ளவோ இல்லை. அவர் வெளிப்படையாகத் தேவாலயத்தைச் சுத்திகரித்தார் (மத்தேயு 21:12, 13; மாற்கு 11:15-17; லூக்கா 19:45, 46). யூதர்கள் தேவாலயத்தைக் கால்நடைகள் ஏலம்விடும் இடமாக மாற்றிப் போடுமளவுக்கு மோசடியில் ஆழ்ந்திருந்தனர். இயேசு, ஒருவர் மாத்திரமே, அதை நிறுத்திப் போட்டார். என்ன தைரியம்! என்ன பலம்! அவர் எருசலேம் நகருக்குள்ளே "நியாயத்தீர்ப்பு உவமைகளை" போதித்தார். இயேசுவுடன் நடுநிலை என்று எதுவும் இருப்பதில்லை - நீங்கள் அவரை ஏற்றுக்கொண்டாக வேண்டும் அல்லது அவரைச் சிலுவையில் அறைந்தாக வேண்டும்! அவரது விரோதிகள், "அவரைக் கடிந்துகொள்ளும்" என்று ஒருக்காலும் கூறவில்லை. அவர்கள், "அவரைக் கொல்லும்!" என்றே கூறினார்கள்.*

*மதத்தலைவர்கள் இயேசுவினால் "தங்கள் புத்தி சாதுரியம் தோற்கடிக்கப்பட்டது பற்றி அச்சமுற்றிருந்தனர்!" அவரது அற்புதங்கள் ஒதுக்கப்பட இயலாதவைகளாக இருந்தன. இயேசுவைப்பற்றிய சத்தியத்திற்கு எருசலேம் வெறுப்புணர்வும் பரிவிரக்கமற்றநிலையும் கொண்டிருந்தது. அவர்மீதோ அல்லது அவரது ஊழியத்தின்மீதோ மார்க்கத் தலைவர்கள் கட்டுப்பாடு எதையும் கொண்டிருக்கவில்லை.*

*எவரொருவரும் பஸ்காவின்போது கலகம் ஒன்று ஏற்படுவதை விரும்பவில்லை. யூதர்கள் பண்டிகையின்போது இயேசுவைக் கொல்ல விரும்பியிருந்தால், அதற்கேற்றபடி அவர்கள் திட்டங்களை வகுத்திருப்பார்கள், மற்றும் அவற்றைச் செயல்படுத்த வியாழக்கிழமை இரவு வரையிலும் அவர்கள் காத்திருந்திருக்க மாட்டார்கள். இதுவே யூதாஸ் காட்சியில் நுழைந்த இடமாக உள்ளது. அவன் இயேசுவுடன் இருந்திருந்ததாலும், எருசலேமில் அவரது போதனையைக் கேட்டிருந்ததாலும், இயேசு தமது மரணத்தைக் குறித்து அறிவித்திருந்ததை அவன் கேட்டிருந்தான். அதை வைத்து தான் பொருளீட்டமுடியும் என்று யூதாஸ் நினைத்தான்.*

*ஒரு கருத்தமைவில், இயேசு நெருங்கிக் கொண்டிருந்த தமது மரணத்தைப் பற்றி அறிவித்தது அவரது எதிரிகளுக்கு நற்செய்தியாக இருந்தது, ஆனால் பண்டிகையின்போது உருவாக்கப்பட்டதான, அதன் (மரணத்தின்) உறுதியற்ற தன்மை/நிச்சயமின்மை அவர்கள் பெரும் அச்சம் கொள்ளக்காரணமாயிற்று. அவர்கள் மீனவர்களுக்கும் அவரது சீஷர்களாயிருந்த மற்றவர்களுக்கும் அஞ்சவில்லை, ஆனால் அவர்கள் இயேசுவைக் குறைவாக மதிப்பிடவில்லை. பரிசேயர்கள், "இதோ, உலகமே அவனுக்குப் பின்சென்று போயிற்றே" என்று கூறினர் (யோவான் 12:19ஆ). விசுவாசமற்ற யூதர்களின் கண்களில், லாசருவின் உயிர்த்தெழுதலானது கிறிஸ்துவின் மரணத்தை அவசியப்படுத்திற்று (யோவான் 11). இயேசு முழு உலகத்தையும் (தமக்கு) இணங்கச் செய்துவிடுவார் என்று அவர்கள்*

*அச்சமுற்றனர்!*

*இயேசு கொடுத்திருந்தவை போன்ற சத்தியங்களும் அவர் செய்திருந்தவை போன்ற அற்புதங்களும் பாவிகளைப் பயமுறுத்துவனவாக இருக்க வேண்டும்! எருசலேம் மக்கள் மனந்திரும்புவதற்கான ஒவ்வொரு வாய்ப்பையும் தேவன் கொடுத்தார், ஆனால் அவர்கள் ஆதாரத்தை மறுத்தனர். இயேசுவின் நிமித்தம் மதத்தலைவர்கள் தங்கள் மதப்பதவிகளை மாத்திரமல்ல, ஆனால் தங்களின் பண ஆதாயங்களையும் இழந்துபோகவிருந்தனர் (யோவான் 11:47, 48). இயேசு மரித்தாக வேண்டும் என்று காய்பா அறிவித்ததில் வியப்பெதுவும் இல்லை (யோவான் 11:49, 50)! "ஆனால் யூதர்கள் ஒரு மேசியாவை எதிர்நோக்கியிருந்தார்களே," என்று நீங்கள் கூறலாம். ஆம் மற்றும் இல்லை. அவர்கள் அதைப்பற்றிப் பேசினார்கள்; அவர்கள் அதை வரம்பு மீறி ஆராய்ந்தார்கள் ... ஆனால் தேவன் அனுப்பிய வகையிலான மேசியா என்பவர் மதத்தலைவர்கள் விரும்பிய கடைசி விஷயமாக இருந்தார். அவர்களை அவர் "பணியற்றவர்களாக்கி" விடுவார் என்பதை அவர்கள் அறிந்தனர். அதிகாரத்துடனான மேட்டிமையானது, நாசகரமான விஷயங்களைச் செய்கிறது. மேட்டிமை கொண்ட மனிதர்கள் அதிகாரத்தை விட்டுக் கொடுக்க முடியாதவர்களாக உள்ளனர். அவர்களால் சத்தியத்தைப் புறக்கணிக்கவும், சத்தியத்திற்கு விரோதமாகப் போராடவும், சத்தியத்தை அழிக்க முயற்சி செய்யவும் மாத்திரம் முடியும். கட்டுப்பாட்டை இழந்த யூதர்கள், இயேசு "குற்றமுள்ளவராக" இருந்தார் என்று முத்திரை குத்தினர். பிலாத்து அவரை "குற்றமில்லாதவர்" என்று அறிவித்தார் (யோவான் 18:38).*

*இயேசுவை விசாரணை செய்த நிகழ்ச்சிகளில் மிகத்தெளிவான முறையற்ற செயல்களில் பின்வரும் சட்டமுறைகளை மீறியவையும் அடங்கும்:*

- *விசாரணையொன்று தொடங்குமுன் குற்றமுண்டு அல்லது குற்றமில்லை என்ற முடிவு ஏற்படுத்தப்பட முடியாது.*
- *யாரேனும் ஒருவர் குற்றச்செயலில் (கையும் களவுமாக) பிடிபட்டால் அன்றி, இரவு நேரத்தில் எவரையும் கைது செய்ய அதிகாரிகளுக்கு அதிகாரம் இல்லை. கைது செய்தலில் நீதிபதிகளுக்கு எந்தவித பங்கும் இருக்கக்கூடாது.*
- *கொலைத் தண்டனை பற்றிய விசாரணைகளை இரவு வேளையில் நடத்தக் கூடாது.*
- *ஒரு குற்றவாளியை ஒரே நாளில் விடுதலை செய்துவிட முடியாதிருந்தது; ஒரு குற்றத்திற்கான தீர்ப்பும் அதைப்பற்றிச் சிந்திப்பதற்கு ஒரு இரவு வேளையைக் கோரிற்று.*
- *சிலுவையில் அறையப்படுதல் என்பது யூதர்களின் பிரமாணத்தில் அறியப்படாததாக இருந்தது.*
- *நியாயாதிபதிகள் குற்றம்சாட்டுபவர்களாய் மாத்திரமல்ல, குற்றவாளிக்காகப் பாதுகாப்பு வாதம் செய்ய வேண்டியவர்களாகவும் இருந்தனர்.*

- வதந்தியான ஆதாரம் எபிரெய சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படக் கூடாததாக இருந்தது.
- சூழ்நிலைக்கேற்ற ஆதாரம் மதிக்கப்படாததாக இருந்தது; எபிரெய சட்டமானது இரண்டு அல்லது மூன்று சாட்சியங் களை அடிப்படையாகக் கொண்டிருந்தது.
- சனதெரீன் ஆலோசனை சங்கத்தின் மிக இளைய உறுப்பினர்கள் முதலாவது வாக்களிக்க வேண்டும்.
- சனதெரீன் ஆலோசனை சங்கத்தின் உறுப்பினர் ஒருவர் குற்றம் சாட்டப்பட்டவருக்காக வாதாட நியமிக்கப்பட வேண்டும்.
- குற்றங்களை உண்டாக்குவதற்கல்ல ... அவற்றை விசாரிக்க மாத்திரமே சனதெரீன் சங்கம் அதிகாரம் கொண்டிருந்தது.
- பண்டிகை நாட்களிலும் ஓய்வுநாளுக்கு முந்திய நாளிலும் நீதிமன்ற நடவடிக்கை தடை செய்யப்பட்டிருந்தது.
- குற்றம் சாட்டப்பட்டவர் தனக்காகச் சாட்சி கூற இயலாது.
- பிரதான ஆசாரியன் தனது வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்ளக் கூடாது.

மிகவும் மோசமானவர்கள் தங்களை மிகவும் சிறந்தவர்களாக யூகித்துக் கொண்டனர். பாவத்தில் மனிதர்கள் எவ்வளவு மிருகத்தனமாக இருக்க முடியும் என்பதை நினைத்துப் பார்ப்பதே பயமூட்டுவதாக உள்ளது!

## யூதர்களின் விசாரணைகள்

இயேசுவைக் கைது செய்த விஷயமானது அவ்வளவாக இகழத் தக்கதாக இராதிருந்தால், அது நகைச்சுவைக்குரியதாக இருந்திருக்கும். அப்போஸ்தலர்களைக் காட்டிலும் இயேசுவின் விரோதிகள் அவரது வல்லமையில் அதிகம் நம்பிக்கை கொண்டிருந்தனர். அவர்கள் இயேசு என்ற ஒரு மனிதரைக் கைதுசெய்ய, (அறுநூறு அல்லது அதற்கதிகமான எண்ணிக்கை என்று மதிப்பிடப்பட்டுள்ள) சட்டமுறைமையற்ற ஒரு கும்பலை அனுப்பினர்! தெளிவான கண்ணோக்கில், இயேசு தம்மைக் கைது செய்ய அவர்களுக்கு உதவ வேண்டியிருந்தது.

உயர் நீதிபதிகளினிடையே இயேசு ஒரு பந்தைப் போல முன்னும் பின்னுமாக இழுத்துச் செல்லப்பட்டார். முதலில் அவர் அன்னாவிடம் இழுத்துச் செல்லப்பட்டார். இந்தப் பிரதான ஆசாரியன் வாழ்நாள் முழுவதும் பதவியில் இருக்க அபிஷேகிக்கப்பட்டிருந்தார், ஆனால் அவரது ஊழல் அவரை (பதவியிலிருந்து) நீக்கிப்போட்டிருந்தது. அவர் பதவியெதுவும் வகித்திருக்கவில்லை என்றாலும், இன்னமும் அதிகார மிகுந்தவராகவே இருந்தார்.

அன்னா அவரை (இயேசுவை) காய்பாவிடம் அனுப்பினார். இது இயேசு மதக்காரணங்களுக்காக விசாரிக்கப்படவில்லை, ஆனால் அரசியல் மோசடியின் நோக்கங்களுக்காகவே விசாரிக்கப்பட்டார் என்பதைக் காண்

*பிக்கிறது. அன்னாவின் மருமகனான காய்பா, அந்த ஆண்டிற்கான பிரதான ஆசாரியராக இருந்தார். அன்னா அதிகாரமிகுந்தவராக, அஞ்சத்தக்கவராக, மற்றும் வெறுக்கப்பட்டவராக இருந்தார். காய்பாவோ, அன்னா "சொல் வதை எல்லாம் செய்யும் பையனாக" முற்றிலும் அவரது கட்டுப்பாட்டின் கீழாக இருந்தார்.*

*மேட்டிமையான, வெறுப்புணர்வு மிகுந்த, மற்றும் வார்த்தைகளால் விளக்கி கூறுவதற்கு அப்பால் விரோதம் நிறைந்த யூதத்தலைவர்கள் தங்களது அடக்க உணர்வை இழந்தனர். அவர்கள் மிருகத்தனமாக இயேசுவின்மீது துப்பினர், அவரை அறைந்தனர், அவரைக் குத்தினர், அவரைச் சபித்தனர், மற்றும் அவரது கண்களைக்கட்டி, அவர் தீர்க்கதரிசனம் கூற வேண்டும் என்று அவரை ஏளனப்படுத்தினர் (மத்தேயு 26:67, 68; மாற்கு 14:65; லூக்கா 22:63-65). நாம் ஒருவேளை சாபங்களையும் அறைதல்களையும் சகிக்கக் கூடும், ஆனால் துப்பப்படுதல்? துப்பப்படுதலை யார்தான் சகிக்கமுடியும்? தேவன் எவ்வாறு சகித்தார்? இயேசு துப்பப்படுதல் பற்றித் தீர்க்கதரிசனம் சொன்னார் (மாற்கு 10:34; லூக்கா 18:32). அவரது முன்னுரைத்தல் உண்மையாயிற்று. யூதத்தலைவர்கள் அவரது முகத்தில் துப்பினர், மற்றும் ரோமச் சேவகர்கள் அவர்மீது துப்பினர் (மத்தேயு 26:67; 27:30; மாற்கு 15:19). மிகவும் இழிவானதாகும்! தேவனுடைய கிருபையானது, <u>துப்பப்படுதல் உட்பட எதையும் சகிக்கக் கூடும்!</u>*

*பேதுரு "பிசாசின் நெருப்பினால்" தன்னை வெதுவெதுப்பாக்கிக் கொண்டிருந்தார் (மாற்கு 14:54; லூக்கா 22:55; யோவான் 18:18, 25ஐக் காணவும்). இதைச் செய்ததில் அவர் தம்மைக் கிறிஸ்துவினிடத்தில் இருப் பதைக் காட்டிலும் விரோதியினிடத்தில் அதிக நெருக்கமாக வைத்துக் கொண்டார். <u>நீங்கள் எங்கு இருக்கிறீர்கள் மற்றும் யாருடன் நேரத்தைச் செலவிடுகிறீர்கள் என்பதில் எப்போதும் கவனமாயிருங்கள்.</u>*

*விரைவாகத் தொடர்ந்த நிகழ்ச்சிகளில், பேதுரு மும்முறை இயேசுவை மறுதலித்தார். பின்பு சேவல் கூவியது மற்றும் சாத்தான் அகம் மகிழ்ந்தான். இயேசு விசாரணைக்குப்பின் விசாரணைக்காக இழுத்துச் செல்லப்பட்டார். அவர் காய்பாவினிடத்தில் இருந்து சனதெரீன் ஆலோசனைச் சங்கத்திற்குக் கொண்டு செல்லப்படுகையில், பேதுரு இருந்த முற்றத்தின் அருகே கூட்டிச் செல்லப்பட்டார். இயேசு திரும்பி, பேதுருவைப் பார்த்தார், அந்த அப்போஸ்தலருடைய இருதயம் உருகிப்போயிற்று. அவர் வெளியே சென்று தாம் செய்தது பற்றி மனங்கசந்து அழுதார் (லூக்கா 22:61, 62).*

*யூதர்களின் உயர்நீதிமன்றம் ஒருகாலத்தில் மாபெரும் சனதெரீன் ஆலோசனைச் சங்கம் என்று புகழப்பட்டிருந்தது. அது எழுபத்தியோரு மேன்மையான உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. அவர்களின் புகழ்வாய்ந்த பதவி அந்த நாளில் முற்றுப்பெற்றது. முரட்டுத் துணிச்சல் கொண்ட காய்பா, இயேசுவை சத்தியத்தின்கீழ் தமக்குச் சாட்சிகொடுக்கும் படி நிர்ப்பந்தித்தார் (மத்தேயு 26:62-64). இயேசு அவர்களின் குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டது மட்டுமின்றி, தமக்கு எதிராகப் பயன்படுத்துவதற்கு மேலும் சாட்சியை அவர்களுக்குக் கொடுத்தார்: "அன்றியும், மனுஷ குமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும்*

*வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 26:64). அத்துடன், யூதர்கள் அவரைப் பிலாத்துவிடம் அனுப்பினார்கள்!*

*பிலாத்து இயேசுவினிடத்தில் கேட்ட பின்வரும் ஒரு கேள்விக்குப் பின்னால் யூதத்தலைவர்கள் இருந்தனர் என்பது தெளிவு: "நீ யூதர்களுக்கு இராஜாவா?" ஏற்கனவே ஒரு குற்றச்சாட்டு ஏற்படுத்தப்படாது இருந்தால், என்ன கேட்கவேண்டும் என்பது பிலாத்துவுக்கு எப்படித் தெரியும்? இது அந்த இரவில் முன்னதாகவே யாரோ ஒருவர் பிலாத்துவைத் தொடர்பு கொண்டிருந்தார் என்பதைத் தெரிவிக்கிறது. அந்த இரவில் யார் பிலாத்து வினிடத்தில் வந்திருக்க முடியும்? அனேகமாக, பிரதான ஆசாரியனாகிய காய்பாதான் அதைச் செய்திருக்க முடியும். மீண்டுமாக, பிலாத்துவின் மனைவி கண்ட தொல்லைப்படுத்தும் கனவு எவ்வாறு கருத்தொன்றை ஏற்படுத்தியிருக்கக் கூடும் (மத்தேயு 27:19)? இது பிலாத்து இந்த வழக்கை மறுபடி திறந்தபோது யூதத்தலைவர்கள் அவமானப்படுத்தப்பட்டது ஏன் என்பதை விளக்குகிறது. யூதர்கள் விஷயம் முடிந்துபோயிற்று என்று நினைத்திருந்தனர்!*

## ரோம விசாரணைகள்

*பொந்தியு பிலாத்து யூதர்களை வெறுத்தான், அவர்கள் அவனை வெறுத்தனர். அவர்கள் ஒருவருக்கு ஒருவர் விரோதமாக நின்றனர், மற்றும் அவர்களுக்கு இடையிலான விவாதத்தில் வெற்றிபெறுவதற்கு அவர்கள் ஒவ்வொருவரும் எதைவேண்டுமானாலும் செய்வதாக இருந்தனர். பிலாத்து தனது கடந்த காலத்தவறுகளின் பதிவினிமித்தம், மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியதாயிற்று. யூதர்கள் இரத்தத்தை விரும்பினர்; பிலாத்து தனது அரசியல் பதவியைக் காத்துக்கொள்ள விரும்பினான்.*

*யூதர்கள் அரசியல் சூழ்ச்சிகளில் ஒன்றாக தேவதூஷணம் என்ற குற்றத்தைச் சுமத்தினர். இந்தத் தவறான பழிதூற்றுதலில் தான் பங்கேற் றிருப்பதைப் பிலாத்து தவிர்க்க முயற்சிசெய்தான், ஆயினும் அவனால் அதைச் செய்யக்கூடாமற் போயிற்று. மற்றவர்கள் தீர்ப்புக்கூறுவதை அவன் விரும்பினான், ஆனால் அவர்கள் மறுத்துவிட்டனர். இயேசு "குற்ற மற்றவர்" என்று அவன் மறுபடியும் மறுபடியும் அறிவித்தான். நம்பிக்கை இழந்த நிலையில் அவன் இயேசுவை ஏரோதிடத்திற்கு அனுப்பினான்.*

*ஒரு மந்திரவாதக் காட்சியை நிகழ்த்தும்படிக்கு ஏரோது கேட்டுக் கொண்ட வேண்டுகோளை இயேசு ஒப்புக்கொள்ளவில்லை. அவரைப் பிலாத்துவினிடத்திற்கே திரும்பி அனுப்புதல் என்று ஒருசெயலைத்தான் ஏரோது செய்ய முடிந்தது. இந்தச் செயல்முறையின் மூலம் சாதிக்கப்பட்ட ஒரே விஷயம் பிலாத்துவும் ஏரோதும் நண்பர்கள் ஆயினர் என்பது மாத் திரமே (லூக்கா 23:12).*

*இயேசுவின் அமைதியான இயல்பு குறித்துப் பிலாத்து ஆச்சரியப்பட் டான். அவன் பரபாஸைப் பயன்படுத்தி, யூதர்களுக்குச் சாதகமாக இயேசுவை விடுதலை செய்ய முயற்சி செய்தான். அவர்கள் அதைப் புறக்*

*கணித்துவிட்டனர். அவர்கள் எல்லாரும் அறிந்த முரடனான பரபாஸை விடுதலை செய்வதைத் தேர்ந்துகொண்டனர்! மக்கள் எப்போதுமே ஒரு பரபாஸைத் தேர்ந்துகொள்கின்றனர்.*

*யூதர்கள் வெற்றிபெற்றாலும் இழந்து நின்றனர். அவர்கள், "இராயனே யல்லாமல் எங்களுக்கு வேறே ராஜா இல்லை" என்று அறிவித்தனர் (யோவான் 19:15). அவர்கள் இராயனுக்காகத் தேவனைத் துறந்துவிட்டனர். அவர்கள் தாங்கள் வெறுத்தவற்றைப் பணிந்துகொண்டனர், "இவன் இரத்தம் எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருக்கட்டும்" என்றும்கூடக் கூக்குரலிட்டனர் (மத்தேயு 27:25).*

*பிலாத்து "குற்றமில்லாதவராக இருந்த" இயேசுவைச் சிலுவையில் அறையும்படி கட்டளையிட்டான்! அவன் தனது கைகளைக் கழுவியிருந் தான்; இயேசு மற்றவர்களின் பாதங்களைக் கழுவியிருந்தார். என்ன ஒரு வேறுபாடு!*

*யூதர்களின் விருப்பத்திற்குப் பிலாத்து இணங்கிச் சென்றான். இது குற்றங்களுக்கெல்லாம் குற்றமாக இருந்தது! யூதர்களைப்போலத் தப்பெண்ணம் கொள்ளவேண்டாம், ஏரோதுவைப்போல பொழுதுபோக்கு எண்ணம் கொள்ளவேண்டாம், அல்லது பிலாத்துவைப்போல முதுகெலும் பற்று இருக்க வேண்டாம். வரலாற்றாளரான ஈசுபியஸ்[1] என்பவர் பிலாத்து தற்கொலை செய்துகொண்டான் என்று கூறினார். தேவன் (கி.பி. 67-70ல் தீத்துவையும் ரோமப்படைகளையும் பயன்படுத்தி) எருசலேமைத் துடைத்துப் போட்டார். தேவனிடம் கலகம் செய்ய வேண்டாம்!*

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*

---

குறிப்பு

[1]Eusebius *Ecclesiastical History* 2.7.